# கிழக்கு மாகாண சபை

## 2012 ஆம் ஆண்டிற்குரிய ஒப்பந்ததாரர்களைப் பதிவு செய்தல்

கிழக்கு மாகாண சபையின் 2012 ஆம் ஆண்டிற்கான நிர்மாண மற்றும் திருத்த வேலைகளுக்கான ஒப்பந்ததாரர்களை பதிவு செய்வதற்கான விண்ணப்பங்களைக் கோரல்.

**<u>ஒப்பந்ததாரர்களாகப் பதிவு செய்து கொள்வதற்குரிய தகைமைகள் :-</u>**

1. ICTAD நிறுவனத்தில் நிருமாணதாரர்களாகப் பதிவு செய்து கொண்டுள்ள ஒப்பந்ததாரர்கள் ரூபா 5,000,000/= (ரூபா ஐந்து மில்லியன்) வரையிலான சிறிய ஒப்பந்த வேலைகளின் பொருட்டுத் தம்மைப் பதிவு செய்து கொள்ளத் தகுதியுடையோராவர். அத்துடன் பதிவு செய்து கொண்டுள்ள சங்கங்கள் ரூபா 1,000,000 (ரூபா ஒரு மில்லியன்) பெறுமதியான ஒப்பந்த வேலைகளை செய்யும் தகுதியை கொண்டிருக்கும்.
2. சிவில் பொறியியல் நிர்மாண வேலைகளை கையாளும் தகுதி பெற்றிருப்பின் அவற்றை உறுதிப்படுத்தும் சான்றுகளை சமர்ப்பிக்க வேண்டும் (விண்ணப்பத்துடன் பிரதிகள் இணைக்கப்படல் வேண்டும்.)
3. தகைமைகளையும் உடைமைகளையும் உறுதிப்படுத்துவதற்கான சான்றாவணங்கள் சமர்ப்பிக்கப்பட வேண்டும் (அவற்றின் பிரதிகள் விண்ணப்பத்துடன் சமர்ப்பிக்கப்பட வேண்டும்)

**<u>விண்ணப்பப்படிவமும் பதிவு செய்தலும்</u>**

**பதிவுகளை மேற்கொள்வதற்கு**

1) மீளளிக்கப்படாத கீழ்க்காணும் தொகைகளை செலுத்துதல் அவசியமாகும்.

1. ரூபா 1,000,000/= க்கு குறைந்த தொகைக்கு - ரூபா 1,000.00
2. ரூபா 1,000,000/= முதல் ரூபா 2,000,000/= வரையிலான தொகைக்கு - ரூபா 2,000.00
3. ரூபா 2,000,000/= முதல் ரூபா 5,000,000/= வரையிலான தொகைக்கு - ரூபா 3,000.00

**<u>நிபந்தனைகள் :-</u>**

1. ஒப்பந்ததாரர்களுக்கான பதிவுகள் 2012 ஆம் வருடத்திற்கு மாத்திரமே வலுவிலிருக்கும் பதிவு செய்து கொண்ட ஒப்பந்தகாரர்களிடமிருந்தே விலைமனுக்கள் கோரப்படும் எவ்வாறு இருப்பினும் பிற முறைமைகள் மூலம் கேள்வி கோரும் உரிமை சேவை பெறுநருக்குண்டு.
2. பதிவு செய்வதற்கான விண்ணப்பங்கள் மதிப்பீட்டிற்கும், கணிப்பீட்டிற்கும் உட்படுத்தப்படுவதுடன் தவறான தகவல்களை சமர்ப்பித்தனவாக காணப்படும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.
3. பதிவு செய்வதற்காக பெறுகின்ற ஏதேனுமொரு விண்ணப்பத்தை எதுவித காரணங்களையும் கருத்திலெடுக்காது ஏற்றுக் கொள்வதற்கான அல்லது மறுப்பதற்கான உரிமை பிரதம செயலாளருக்குண்டு.

4. பதிவு செய்த ஒப்பந்ததாரர்கள் விலை மனுக் கோரப்படுமிடத்து சரியான வகையில் விலை மனுவை குறிப்பிடத்தவறின் அல்லது குறித்தொரு வேலையை குறிக்கப்பட்ட காலத்துள் பூர்த்தி செய்யத்தவறின் அவற்றின் நிபந்தனைகளுக்கமைவாக ஒப்பந்ததாரர் பதிவேட்டிலிருந்து எதுவித முன்னறிவித்தலுமின்றி பெயர் நீக்கலுக்குள்ளாக்கப்படுவார்.
5. தமது வர்த்தகப் பதிவிற்குரிய நிர்மாணப் பணித்துறையுடன் தொடர்புற்றவைக்கு மாத்திரமே ஒப்பந்ததாரர் தமது பதிவினை மேற்கொள்ள முடியும்.
6. பதிவு செய்து கொள்ளும் சங்கங்களானவை ரூபா 1,000,000/= க்கு (ஒரு மில்லியன்) மேற்படாத வேலைகளைப் பொறுப்பேற்க முடியும்.
7. ஒப்பந்த வேலைகளை மேற்கொள்ள விரும்பும் மாவட்டங்களை ஒப்பந்ததாரர் தாம் குறிப்பிடல் வேண்டும்.
8. பதிவுகளை மேற்கொள்வதற்கான விண்ணப்பங்களையும் இங்கு வழங்கப்பட்டிருக்கும் மாதிரிப் படிவத்திற்கமைவாக சுயமாகத் தயார் செய்து வர்த்தகப் பதிவுச் சான்றிதழின் சான்றுப்படுத்திய பிரதியுடனும், மீளளிக்கப்படாத பதிவுக் கட்டணம் செலுத்திய வங்கிச் சிட்டையுடன் "பிரதிப் பிரதம செயலாளர் (நிதி) கிழக்கு மாகாணம், கன்னியா வீதி, வரோதய நகர், திருகோணமலை" எனும் முகவரிக்கு 16.01.2012 ஆம் திகதியன்று அல்லது அதற்கு முன்னராக கடித உறையின் இடது புற மேல் மூலையில் "2012 ஆம் ஆண்டிற்கான ஒப்பந்ததாரர்களைப் பதிவு செய்தல்" என தெளிவாகக் குறிப்பிட்டு பதிவுத்தபாலில் அனுப்பி வைக்கப்படல் வேண்டும்.
9. உரியவாறு பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பத்துடன் மேற்காட்டிய மீளளிக்கப்படாத காசு வைப்புத் தொகையினை திருக்கோணமலை மக்கள் வங்கியின் கிழக்கு மாகாண சபையின் பிரதிப் பிரதம செயலாளர் – நிதி, அவர்களின் வங்கிக் கணக்கு இல 066-1-001-6-7200559 க்கு வைப்பிலிட்ட சிட்டை இணைத்தனுப்பப்படல் வேண்டும்.
10. 16.01.2012 ஆம் திகதி பி.ப 3.00 மணிக்குப் பின்னர் கிடைக்கப் பெறும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.
11. மேலதிக தகவல்களைத் தயக்கமின்றிப் பெற்றுக் கொள்ள பிரதிப் பிரதம செயலாளர் – நிதி அவர்களின் 026-2224852 , 026-2222206 ஆகிய தொலைபேசி இலக்கங்கள் மூலமாக அல்லது www.ep.gov.lk என்ற வெப் தளத்தின் மூலமாக தொடர்புகளை ஏற்படுத்தி அறிந்து கொள்ள முடியும்.

## ஒப்பந்த நிர்மாணங்கள்

- கட்டிட நிர்மாணங்கள், திருத்தங்கள், பராமரித்தல்கள்.
- வீதி நிர்மாணங்கள், திருத்தங்கள்
- நீர்ப்பாசனக் குளங்களின் அணைகளை, கால்வாய்களை நிர்மாணித்தல், மற்றும் திருத்தங்கள்
- வடிகாலமைப்பு, வேலைகள்
- நில இயற்கைத் தோற்ற மட்டப்படுத்தல் வேலைகள் ~ Landscape
- உள்ளக அலங்கரிப்புக்கள்

வே.பொ.பாலசிங்கம்
பிரதம செயலாளர்
கிழக்கு மாகாணம்.

# மாதிரி விண்ணப்பப்படிவம்

## 2012 ஆம் வருடத்திற்கான நிர்மாண ஒப்பந்ததாரர்களைப் பதிவு செய்தல்.

**<u>கிழக்கு மாகாண சபை</u>**

1. வியாபாரத்தின் பெயர் :-
2. வியாபார முகவரி :-
3. தொலைபேசி இல :-
4. பெக்ஸ் இல :-
5. வியாபார பதிவு இல :-
6. வர்த்தகத்தின் தன்மை :-
7. நிர்மாணத் துறை :-
8. வங்கியின் பெயர் :-
9. கடன் அனுகூலக்காலம் :-
10. வேலைப்பணிகளை கையேற்க விரும்பும் மாவட்டம் :-
11. VAT பதிவு இலக்கம், இருப்பின் :-
12. பிற தகவல்கள் :-

நான் / நாங்கள் மேலே குறிப்பிட்டுள்ள தகவல்கள் அனைத்தும் சரியெனவும், கி.மா.ச. பிரதம செயலாளரினால் விபரிக்கப்பட்டுள்ள நிபந்தனைகளுக்கமைவாக நிர்மாணச் சேவைகளை மேற்கொள்ள முடியுமெனவும் உறுதி கூறுவதுடன் பதிவுக் கட்டணமாக திருக்கோணமலை மக்கள் வங்கிக் கிளையின் கணக்கிற்கு வைப்பிலிடப்பட்ட ரூபா ……………. க்கான வங்கிச் சிட்டையினையும் இத்துடன் இணைத்துள்ளேன்.

| | | |
|---|---|---|
| ………………………. | ………………………... | ………… |
| விண்ணப்பதாரர் ஒப்பம் | விண்ணப்பதாரரின் பெயர் | திகதி |